30th March 1966]

டிருக்கிற கஷ்டத்தைப் போக்க நம்முடைய அரசாங்கம் அதிக முயற்சி எடுத்து கூடுதலாக ஃபாரின் எக்ஸ்சேஞ்சு கொடுக்க வழி செய்வார்களா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : நம்முடைய அரசாங்கம் உதவி செய்ய முடியுமானல் எப்போதும் செய்யத் தயங்குவதில்லை அந்நியச் செலாவணியை நாம் கொடுக்க முடியாது. ஓரளவு இதைப்பற்றியெல்லாம் மத்திய சர்க்காரிடத்தில் சொல்லித்தான் 12½ லட்சம் ரூபாய்க்குப் புதிதாக அந்நியச் செலாவணி கொடுக்கப் பட்டிருக்கிறது.

கள்ளக்குறிச்சியில் பலதொழிற் பயிற்சிப் பள்ளி

* 504 கேள்வி.—**திரு. எல். ஆனந்தன் :** கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப் பாரா :

(அ) நான்காவது ஐந்தாண்டு திட்டத்தில் தென்னார்க்காடு மாவட்டத்தில் ஒரு பாலிடெக்னிக் ஏற்படுத்தும் உத்தேசம் உண்டா ?

(இ) ஆம் எனில், அதன் விபரங்கள் யாவை ?

(உ) கள்ளக்குறிச்சி தாலுக்காவில் அதை ஏற்படுத்தும் உத்தேசமுண்டா ?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) Yes.

(*b*) There is a proposal to establish a Polytechnic in Cuddalore.

(*c*) No.

கூட்டுறவு நூற்பு ஆலை, காஞ்சிபுரம்

* 505 கேள்வி.—**திரு. எஸ். ஜே. ராமசாமி :** கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப் பாரா :

(அ) செங்கல்பட்டு மாவட்டம், காஞ்சீபுரத்தில் உள்ள கூட்டுறவு நூற்பு ஆலைக்கு கதிர்கள், மெஷினரிகள், நூற்பாலைக் கட்டிடங்கள் ஆகியவைகளுக்கு தனித்தனியே செலவு செய்யப் பட்ட தொகை எவ்வளவு ?

(இ) பங்கு மூலதனமாக செலுத்தப்பட்ட (ஷேர் காபிடல்) தொகை எவ்வளவு ?

(உ) அரசாங்கத்தால் கடனாக கொடுக்கப்பட்ட தொகை எவ்வளவு ?